அடையாள இலக்கம்:

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2014

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

# எழுத்தறிவுப் போட்டி

# மத்திய பிரிவு

(8 – 9 வயதுப் பிரிவு)

நேரம்: 1 மணி 30 நிமிடம்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாக 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

(அ) **கோடிட்ட இடங்களைப் பொருத்தமான ஒரு எழுத்தைக் கொண்டு நிரப்புக.**
(10 புள்ளிகள்)

1. திங்கட்கி_______மை
2. தி_______விழா
3. அரச_______ரம்
4. ப_______
5. ம_______சள் நிறம்
6. சி_______ ப்பதிகாரம்
7. கொழுக் _______ட்டை
8. தீபாவ_______
9. பல_______ரம்
10. கா_______டுத்தீ

| புள்ளிகள் | |
|---|---|

**(ஆ) கோடிட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக**
(10 புள்ளிகள்)

1. நான் வீட்டில் ______________________உதவி செய்வேன்.

அ) அம்மாவுடன் ஆ) அம்மாவுக்கு

இ) அம்மாவின் ஈ) அம்மாவை

2. நான் இரவு நேரத்தில் ______________________ செய்து முடிப்பேன்.

அ) வீட்டுப் பாடத்தைச் ஆ) வீட்டுப் பாடத்துக்குச்

இ) வீட்டுப் பாடத்தோடு ஈ) வீட்டுப் பாடத்துடன்

3. ஆனந்தன் ______________________ வெளியே உலாவி வந்தான்.

அ) நாய்க்கு ஆ) நாயின்

இ) நாயை ஈ) நாயுடன்

4. நான் என் ____________________ பல நல்ல பழக்கங்களைக் கற்றுக் கொண்டேன்.

அ) நண்பனிடமிருந்து ஆ) நண்பனுக்கு

இ) நண்பனே ஈ) நண்பனுக்கான

5. புலம் பெயர்ந்த ____________________ உலகெங்கும் பரந்து வாழ்கின்றனர்.

அ) தமிழர்களுடன் ஆ) தமிழர்கள்

இ) தமிழர்களிடத்தில் ஈ) தமிழர்களினால்

| புள்ளிகள் | |
|---|---|

**(இ) வாக்கியத்தில் கோடிட்ட சொல்லுக்கு ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிந்து அதன்கீழே கோடிடுக.** (10 புள்ளிகள்)

1. மாணவர்கள் படிப்பதில் மட்டும் **மனநிறைவு** அடையக் கூடாது.

அ) மகிழ்ச்சி ஆ) உன்னதம் இ) திருப்தி ஈ) ஆர்வம்

2. சீதா **சமயம்** கிடைக்கும் போதெல்லாம் நல்ல புத்தகங்களை வாசிப்பாள்.

அ) ஓய்வு ஆ) நேரம் இ) மன அமைதி ஈ) தனிமை

3. வகுப்பில் பிள்ளைகள் **சத்தம்** போடாது அமைதியாக இருக்க வேண்டும்.

அ) சண்டை ஆ) ஒலி இ) பேச்சு ஈ) அடிதடி

4. எனது தோட்டத்துச் செடிகளில் அழகான **பூக்கள்** பூத்திருக்கின்றன.

அ) துளிர்கள் ஆ) தழைகள் இ) மலர்கள் ஈ) மரங்கள்

5. கொடிய மிருகங்கள் **காட்டில்** வசிக்கின்றன.

அ) வனத்தில் ஆ) குகையில் இ) புற்றில் ஈ) புதரில்

| புள்ளிகள் | |
|---|---|

**(ஈ) கீழேயுள்ள வாக்கியங்களிற் கோடிடப்பட்ட வினைச்சொல் ஒவ்வொன்றின் காலத்தையும் அதன் அடியில் உள்ள வாக்கியத்திற்கு ஏற்றபடி மாற்றித் தரப்பட்ட இடைவெளிகளில் நிரப்புக.** (20 புள்ளிகள்)

1. என் அண்ணன் நேற்றுப் பந்து **விளையாடினார்**.

   நான் நாளை பந்து ________________________

2. அப்பா இப்பொழுது சோறும் கறியும் **சாப்பிடுகிறார்.**

   அவர் நேற்று இரவு தோசை ________________________

3. தமிழ் ஊக்குவிப்புப் போட்டியில் நான் சென்ற வருடம் முதற் பரிசை **வென்றெடுத்தேன்**.

   இம்முறையும் நான் முதற் பரிசை ________________________

4. நாங்கள் கோவிலுக்குத் தினமும் **செல்வோம்.**

   சென்ற வருடமும் இதே நாளன்று கோவிலுக்கு நாங்கள் ________________________

5. கமலா நேற்று மரத்துக்குத் தண்ணீர் **ஊற்றினாள்.**

   இப்பொழுது அவள் மரத்திற்குத் தண்ணீர் ஊற்றிக்கொண்டு ________________________

| புள்ளிகள் | |
|---|---|

# பகுதி 2

**(உ) கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுத்துத் தரப்பட்ட சிறுகதையிற் காணப்படும் கோடிட்ட இடங்களை நிரப்புக.** (20 புள்ளிகள்)

ஒரு பெரிய மரத்தடியில் இருந்து பாட்டி ______________________ சுட்டுக்கொண்டு இருந்தாள். பறந்து வந்த ______________________ ஒன்று அந்த மரத்தில் வந்து இருந்தது. வடையைப் பார்த்ததும் அதற்கு வாய் ஊறத் __________________. பாட்டி சுட்ட வடையைத் தட்டில் போட்டாள். உடனே காகம் பறந்து வந்து தனது __________________ ஒரு வடையைக் கௌவிக் கொண்டு __________________ சென்று ஒரு மரத்தில் இருந்தது. அந்த மரத்தின் அடியில் ஒரு நரி ______________________ படுத்து இருந்தது. காகம் வாயில் வைத்திருந்த வடையைக் கண்டதும் நரி வடையைத் தான் உண்ணவிரும்பி ஒரு __________________ செய்தது. நரி காகத்தைப் பார்த்துக் ''காக்கையாரே காக்கையாரே நீர் நன்றாகப் _________________ அல்லவா. எங்கே உமது இனிமையான குரலால் ஒரு பாட்டுப் பாடும்'' என்றது. தன்னைப் பற்றி நரி புழுகியதைக் கேட்டதும் காகம் __________________ கொண்டது. வாயைத் துறந்து ''கா கா'' என்று பாடியது. வடை கீழே 'தொப்' என்று விழுந்துவிட்டது. நரி ஓடிச்சென்று வடையைச் __________________. ஆசை காட்டுபவர்களிடம் ஏமாறக்கூடாது என்ற புத்திமதியை இக்கதை எமக்குக் கூறுகிறது.

| | | | |
|---|---|---|---|
| வடை | சாப்பிட்டது | | தொடங்கியது |
| பசியுடன் | பாடுவீர் | | சூழ்ச்சி |
| காகம் | அலகால் | பறந்து | தற்பெருமை |

| புள்ளிகள் | |
|---|---|

**(ஊ) கீழேயுள்ள படங்களைக் கவனமாகப் பார்க்கவும். கீழே தரப்பட்ட 5 சொற்களைப் பாவித்துப் படங்களுக்குப் பொருத்தமான வசனங்களை எழுதுக.**

(20 புள்ளிகள்)







1. படகு : ________________________________________

________________________________________________

2. சூரியன்: ________________________________________

________________________________________________

3. பந்து :________________________________________

________________________________________________

**4.** கடற்கரையிலே ஒன்பது : ____________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

**5.** இரண்டு : ___________________________________________________________

______________________________________________________________________

| புள்ளிகள் | |
|---|---|

**(எ) கீழே தரப்பட்ட செற்களுக்குப் பன்மைச் சொற்களை எழுதுக.**

(10 புள்ளிகள்)

1. படம் - ______________________

2. மான் - ______________________

3. பழம் - ______________________

4. கல் - ______________________

5. நண்பன் - ______________________

| புள்ளிகள் | |
|---|---|